செ.வெ.எண். 1047

நாள் 30.11.2010

வேளாண்மைத்துறை அமைச்சர் அலுவலகம்

செய்தி வெளியீடு

சென்னை மாநகர மக்களுக்காகவும், சுற்றுலாப் பயணிகளுக்காகவும், உலகத் தரம்வாய்ந்த பூங்காவான செம்மொழிப் பூங்கா மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 24.11.2010 அன்று திறந்து வைக்கப்பட்டது. 1.12.2010 முதல் இப்பூங்கா சென்னை நகர மக்களின் நடைப் பயிற்சிக்காக காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையும், பொதுமக்களின் பார்வைக்கு காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையும் திறந்திருக்கும்.

பூங்கா, நுழைவுக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு ரூ.5./— நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 வயது சிறுவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நுழைவுக் கட்டணம் இல்லை. இப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி அரங்கை பயன் படுத்த நாள் ஒன்றுக்கு ரூ.15,000/—மும், நடைப்பயிற்சிக்கு மாதாந்திர கட்டணமாக ரூ.150/—ம், இரண்டு சக்கர வாகனத்திற்கு 3 மணி நேரம் வரை ரூ.5/—ம் நான்கு சக்கர வாகனத்திற்கு 3 மணி நேரம் வரை ரூ.10/—ம், இந்த இரு வாகனங்களுக்கும் 3 மணி நேரத்திற்கு மேலாகும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரு.5/—ம், மாக்சிகேப் / வேன் கட்டணம் முதல் மூன்று மணி நேரத்திற்கு ரு.25/—ம் அதற்கு மேலான ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ.25/— ஆக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செம்மொழிப் பூங்காவிற்கு வரும் பார்வையாளர்களின் வாகனங்கள் மட்டுமே நிறுத்த அனுமதி உண்டு.

செம்மொழிப் பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பூங்காவினை பாதுகாக்கும் பொருட்டு பிளாஸ்டிக் சம்பந்தப்பட்ட பொருட்கள் மற்றும் வெளியிலிருந்து கொண்டு வரும் உணவுப் பண்டங்களை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பூங்காவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும் சிறுவர்களுக்காகவும் தனியாக உணவுகங்கள் அமைக்கப்பட உள்ளன. இதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த ரம்மியமான பூங்காவினை பராமரிக்கும் பொருப்பு உங்களையும் சாரும். பூங்காவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நடைப்பாதையை பயன் படுத்தி பூங்காவை பார்வையிடுமாறும், செடிகளையோ, பூக்களையோ பறிக்கவோ, சேதப்படுத்தவோ கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வேளாண்மைத்துறை அமைச்சர் (கையொப்பம்)
30-11.10.

வேளாண்மைத் துறை அமைச்சர்
தலைமைச் செயலகம், சென்னை-600 009

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.

1/1